## நேபாளத்தில் சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல் நடத்தப்பட்டது

நவம்பர் 19, 2013

நேபாளத்தில் அரசியலமைப்புச் சபை மற்றும் நாடாளுமன்றத்திற்கான தேர்தல் இன்று சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல் நடத்தப்பட்டுள்ளது, அங்கு ஜனநாயக மற்றும் வளமான எதிர்காலம் என்ற லட்சியத்திற்கான முதல்படியாக அமைந்துள்ளது. நேபாள மக்களும், அரசியல் கட்சிகளும், அரசு மற்றும் பாதுகாப்பு படைகளும் மற்றும் நேபாள தேர்தல் ஆணையமும் இந்த சாதனைக்காக பாராட்டப்பட வேண்டியவர்கள். மனதிற்பதியத்தக்க அளவில் அதிக வாக்குப்பதிவு நிகழ்ந்துள்ளது, நேபாள மக்கள் ஜனநாயக நடைமுறைகளில் நம்பிக்கை வைத்திருப்பதை பிரதிபலிக்கிறது. இந்த தேர்தலை தடையற்று நடத்த தேவையான அத்தியாவசிய பொருள் ஆதரவினை, நேபாள அரசின் கோரிக்கைக்கு ஏற்ப வழங்குவதில் இந்திய அரசு மகிழ்ச்சி அடைந்தது.

புதிய அரசியல் அமைப்புச் சட்டம் விரைவாக அறிவிக்கப்பட வேண்டியது, நேபாள மக்களின் விருப்பங்களை பிரதிபலிப்பதாக இந்தியா நம்புகிறது. இதனுடன் வளர்ச்சித்திட்டங்களில் முன்னேற்றமும் நேபாளத்தின் அமைதி, வளமை மற்றும் நிலைத்தன்மைக்கு பங்களிக்கும். நேபாளத்தின் நெருங்கி நண்பராகவும் அண்டை நாடாகவும், இந்தியா, நேபாள அரசுக்கும் அதன் மக்களுக்கும் அவர்களது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கத் தயாராக இருக்கிறது.